**சென்னை—5, வேளாண்மை இயக்குநர் அலுவலக துணை இயக்குநர்(நிர்வாகம்—2) அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர்:— திரு. வெ. பாலாஜி.,**

**செ.மு.ஆணை எண். அநிபி.8/6906/ 2021** **நாள்.27.06.2024**

பொருள்: பணியமைப்பு — தமிழ்நாடு அமைச்சுப்பணி — கருணை அடிப்படையில் பணி நியமனம் — திருமதி.ட்டி.புவனேஷ்வரி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது), இவ்வலுவலகம் — பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது— தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடல் — தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி6/6906/21, நாள். 04.11.2022.
2. அரசாணை (3டி) எண்.58, வேளாண்மை— உழவர் நலத் (வேநி9) துறை, நாள்.11.06.2024.

••••••

**ஆணை:—**

சென்னை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணித்துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் சேலம், வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 13.02.2029 அன்று பணிக்காலத்தில் அமரரான கோ.வெங்கடேசன் அவர்களின் வாரிசுதாரர் / மனைவி திருமதி.ட்டி.புவனேஷ்வரி அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500—71900 (ஊதிய நிலை—8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பார்வை (1)—இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சென்னை—5, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து, திருமதி.ட்டி.புவனேஷ்வரி அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 08.11.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து கொண்டார்.

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 08.11.2022 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.ட்டி.புவனேஷ்வரி அவர்களின் பணியினை பார்வை (2)—இல் காணும் அரசாணையில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 08.11.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

...2

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) மேலும், திருமதி.ட்டி.புவனேஷ்வரி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) அவர்கள் தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்ட பின்னரே விதிகளின்படி இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையராவார்.

ஒம்/–வெ. பாலாஜி,
துணை இயக்குநர் (நிர்வாகம்–2).

பெறுநர்

திருமதி.ட்டி.புவனேஷ்வரி,
இளநிலை உதவியாளர் (பி.அ),
‘அயம்வார்ம்’ பிரிவு, இவ்வலுவலகம்.

**நகல்:** ‘அபபி’ மற்றும் ‘பணம்’ பிரிவுகள், இவ்வலுவலகம் (அரசாணையுடன்).
**நகல்:** ‘அநிபி–8’ இருப்புக்கோப்பு.

//உத்திரவின்படி//

27/06/24
கணகாணிப்பாளர்.

27/6/24